1969 மார்ச் 28]

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி டிரைவர்களுக்கு உள்ள சம்பளத்தை, மாநக ராட்சியில் வேலை செய்பவர்களுக்கு "ஈக்குவல்" ஆக, சமமாக உயர்த்து வது நல்ல சமாச்சாரம் என்றாலும் நகராட்சிகளிலே வேலை செய்கின்ற லாரி ஓட்டுபவர்களை மாத்திரம் கணக்கிலெடுக்காமல், நகராட்சிகளிலே வேலை செய்கின்ற அத்தனை சிப்பந்திகளுக்கும் இதே மாதிரி சர்க்காரிலே உள்ள சிப்பந்திகளுக்கு ஒப்ப கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாநகராட்சியிலே லாரி ஓட்டு பவர்களுக்கு கொடுக்கிற சம்பள அளவுக்கு நகராட்சியிலே இருப்பவர் களுக்கும் கொடுத்ததாக நான் பதில் அளித்ததாக நீங்கள் கருதிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நான் அப்படிப்பட்ட பதிலைச் சொன்னதாக, இங்கே விளக்கம் இல்லை. எப்போதுமே எல்லா பணிகளிலும் நகராட்சி களுக்கும் மாநகராட்சிகளுக்கும் ஊதியத்திலே வேறுபாடு இருந்து வரு கிறது. நகராட்சியினுடைய நிதி நிலை அதிகப்பட்டு, அப்படிப்பட்ட பிரச்சினை களைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலை வந்தால், நிச்சயமாக அவைகளைக் கவனிக்க அரசாங்கம் தயங்காது.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகளில் லாரி ஓட்டுபவர்களுக்கு சம்பளம் இல்லாது, நாட்படி கொடுக்கப்படுகிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அகவிலைப் படியாக ரூ. 75 தரப்படுகிறது. அரசாங்க விகிதத்தில் அகவிலைப் படியும், அவைகளுக் கொப்ப ரூ. 17 என்ற விகிதத்தில் வீட்டு வாடகைப் படியும் மாநகராட்சி மன்றத்திற்கு வழங்கப்படுகிறது. நகராட்சி மன்றத்திற்கு அகவிலைப்படி ரூ. 75-ம், ரூ. 75-க்கும் அதிகமாக சம்பளம் பெறுபவர்களுக்கு மாதம் ரூ. 7-ம், ரூ. 75-க்கும் குறைவாக சம்பளம் பெறுபவர்களுக்கு ரூ. 3-ம் வீட்டு வாடகைப் படியாக வழங்கப்படுகிறது.

திரு. கே. பி. எஸ். மணி : ஐயா, இந்த டிரைவர்கள் என்ற பட்டியலிலே பஞ்சாயத்து யூனியனிலே வேலை செய்கின்றவர்களுடைய பெயரும் வருகின்றதா? அவர்கள், மற்ற எல்லா டிரைவர்களைக் காட்டிலும் பி. டபிள்யூ.டி., ஹைவேஸ், இவைகளில் உள்ள டிரைவர்களைக் காட்டி லும் குறைவாகச் சம்பளம் வாங்குகிறார்கள். அவர்களுடைய கஷ்டத்தைக் கருதி, ஏதாவது விதிவிலக்கு அளிக்குமா அரசு என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இது, நகராட்சிகள், மாநகராட்சி கள் தொடர்புடைய கேள்வியாகும். ஆகவே, ஊராட்சி ஒன்றியத்தைப் பற்றிய விவரம் இதிலே வரவில்லை.

பேரூராட்சி மன்றப் பணியாளர்கள்

* 529 **வினா.—.திரு சா. மெய்யப்பன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தலைமை எழுத்தர், எழுத் தர், தண்டலர், சுகாதார மேஸ்திரி முதலியோருக்கு சம்பளங்கள் என்ன, தரவாரியாக ?

(இ) அவர்களுக்கு பென்ஷன்கள் உண்டா ?

(உ) அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கப்படுகிறதா ? ஆம் எனில் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) :—

தலைமை எழுத்தர்—ரூ. 90—3—105—4—125.

எழுத்தர்—ரூ. 70—2—90—3—103.

தண்டலர்—ரூ. 55—1—70.

பொதுச் சுகாதார மேஸ்திரி—ரூ. 50—1—60.

(இ) தமிழ் நாடு தாராள ஓய்வூதியத் திட்டம் ஊராட்சிப் பணியாளர்களுக்கு நீட்டிக்கப்படவில்லை. இருப்பினும், பணிக்கொடை, வருங்காலச் சேமிப்பு நிதி நலன்களைப் பெற அவர்களுக்குத் தகுதியுண்டு.

(உ) ஊராட்சிகளின் எழுத்தர்களும், தலைமை எழுத்தர்களும் பேரூராட்சியின் தரம் 1 அதிகாரியாகவும் (ஊராட்சி) வளர்ச்சி அதிகாரியாகவும் தெரிந்தெடுக்கப்படலாம். உரிய தகுதி பெற்றிருப்பின் உரிய காலம் கடந்த பின் தண்டலர்களும் ஊராட்சிகளில் எழுத்தர்களாகப் பதவி உயர்வு பெறலாம். உள்ளாட்சி மன்றங்களில் உள்ள பொதுச் சுகாதார மேஸ்திரிகளுக்கு மேலும் பதவி உயர்வு பெற வாய்ப்பில்லை.

Pre-fabricated houses

* 530 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state.—

(*a*) whether the Tamil Nadu Housing Board has given up the idea of setting up a pre-fabricated housing plant near Madras and

(*b*) if so, the reasons therefor ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) அமைப்பு வீடுகளை (Pre-fabricated houes) அமைப்பதற்குத் தேவைப்படும் தொழிற்சாலையை நிறுவ தோராயமாக ரூ. 4 கோடி செலவு ஆகும். தற்பொழுது ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து இப்பெரும் தொகையை முதலீடு செய்ய இயலாது.

திரு. கே. விநாயகம் : சார், இந்த பிரீ-ஃ பாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் வைத்தால் அந்த யூனிட்டிடமிருந்து, செலவுக் குறைவாக பல பொருள்களைப் பெறமுடியும், வீடுகள் உண்டாக்கமுடியும் என்ற ஒரு கருத்து இருந்தது. அவர்கள் வெளியே அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் போய், இன்னும் விலை குறைவாக, கடைசியிலே வீடுகள் மதிப்பிடப்படும் என்ற கருத்து நமக்கு லாபம் என்ற காரணத்தினால், அதை ஏன் இப்பொழுது கை விட்டுவிட்டார்கள் ? ஹவுஸிங் போர்ட் வீட்டுக்குரிய பொருள்களையும் உண்டாக்கமுடியும், அதன் மூலமாக உறுப்புகள் மற்ற தேவையான பொருள்களையும் குறைந்த விலையில் வினியோகம் செய்யமுடியும், அதனாலே லாபம் அடைய முடியும். அதை ஏன் கைவிட்டார்கள் என்று சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இப்பொழுது இந்த பிரீஃபாபிரிகேட்டட் ஹவுஸிங் பிளாண்ட் கட்டுவதற்கு, நிறுவுவதற்கு மட்டும் தோராயமாக ரூ. 4 கோடி தேவைப்படுகிறது. அதல்லாமல் அந்தப் பொருள்களை வாங்கி வியாபாரம் செய்வதற்கு மேற்கொண்டு பல கோடி ரூபாய் தேவைப்படும். அது மட்டுமல்லாமல், இப்பொழுது செங்கற்சூளை ஒன்று 90 இலட்சம் ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். புழை கற்கள் தொழிற்சாலை ஒன்று சுமார் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவிலே கட்ட இருக்கிறோம். அதற்கும் மேற்கொண்டு பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன. இந்த இரண்டு தொழிற்சாலைகளிலும் உற்பத்தி ஆகின்ற பொருள்களை வாங்கி உபயோகிப்பதற்கு நம்மிடம் போதுமான தேவைகள் இல்லை. அதற்கே, பி. டபிள்யூ. டிபார்ட்மெண்ட், சென்ட்ரல் பி. டபிள்யூ.டி., ரெயில்வே இவர்களெல்லாம் ஒத்துழைத்தால் தான் அந்த இரண்டு தொழிற்சாலைகளும் முன்னுக்கு வரமுடியும். ஆகவே பணமும் தேவைப்படுகிறது. நாட்டிலே தேவையும் குறைவாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இப்பொழுது தொழிற்சாலைகளில் வேலை செய்து வருகின்ற வேலை ஆட்களுக்கு வேலை இழப்பு ஏற்படுகிற நிலைமையும் இருக்கிற காரணத்தால், அதை தற்போது செய்வதற்கில்லை.